12.04.2023 மா.சா.1 .சொர்ணம் Mcop163 of 2021

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3,5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து அன்று என் குழந்தை பயணம் செய்த வாகனத்தை ராமநாதன் என்பவர் தான் ஒட்டினார் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் மொத்தம் 3 பேர் பயணம் செய்தார்கள் என்றால் சரிதான். ராமநாதன் இருசக்கர வாகனத்தை ஒட்டும் போது திடீரென வலதுபுறம் திரும்பியதால் 1ம் எதிர்மனுதாரர் ஆட்டோ மீது மோதினார் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட வாகனமானது முழு காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு 3ம் எதிர்மனுதாரர் மட்டும் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 1,2 எதிர்மனுதாரர்களை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

3,5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து அன்று டி.என்.76.டபிள்யூ.3178 என்ற வாகனத்தை ராமநாதன் என்பவர் தான் ஒட்டி சென்றார் என்றால் சரிதான். அன்றையதினம் என் மைனர் மகள் முன்னாலும், ராமநாதன் வாகனத்தை ஒட்டி சென்றார் என்றாலும், நான் பின்னால் முத்துமாரி என்பவர் அமர்ந்து இருந்தார் என்றாலும் சரிதான். ராமநாதன் ஒட்டிய வாகனம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் வினு சக்கரவர்த்திக்கு சொந்தமானது ஆகும். இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் செல்வதற்கு தான் சட்டப்படி உரிமை உண்டு என்றால் சரிதான். விபத்து அன்று 3 நபர்கள் சென்றது தவறு என்றால் சரிதான். வாகனத்தை ஒட்டி சென்ற ராமநாதனை வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவசிய கட்சியை சேர்க்காத தோஷத்தால் தாவா மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக காவல்நிலையத்தில் ராமநாதன் தான் புகா் கொடுத்தார் என்றால் சரிதான். ராமநாதன் இந்த வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டால் தான் என்ன நடந்தது என்பது பற்றி சொல்ல முடியும் என்றால் சரியல்ல. விபதது சமயத்தில் ராமநாதனுக்கு ஒட்டுனர் உரிமம் கிடையாது என்றால் சரியல்ல. அதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மகள் சென்ற வாகனத்திற்கு முறையான காப்பீடு சான்று கிடையாது என்றால் சரியல்ல.

என் மகளுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றாலும் அதுவும் தற்போது குணமாகிவிட்டது என்றாலும் சரியல்ல. விபத்து ராமநாதன் தான் காரணம் என்றால் சரியல்ல. 3 நபர்கள் பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்திற்கு ராமநாதனும் ஒரு காரணம் என்பதால் அவர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் ராமநாதனுக்கு முறையான ஓட்டுனர் உரிமம் இல்லாததால் எனக்கு இழப்பீடு கொடுக்க ராமநாதன் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. என் மகள் சென்ற வண்டிக்கு எதிரே மோதிய ஆட்டோவை ஓட்டி வந்த 1ம் எதிர்மனுதாருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுனர் உரிமம் மற்றும் பேட்ஜ் இல்லாததாலும் 1ம் எதிர்மனுதாரும் விபத்திற்கு காரணம் என்பதால் அவரும் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான். விபத்து மோட்டார் சட்ட விதிகளுக்கு மாறாகவும், காப்பீடு விதிகளுக்கு மாறாகவும் நடந்துள்ளதால் எனக்கு ராமநாதன் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் மட்டுமே தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. 3,5 எதிர்மனுதாரர்களை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல.